CONTENTS

ENGLISH SECTION

S. No. Page No.

WELFARE WORK

ARTICLES

NEWS AND NOTES

TAMIL SECTION

"Welfare-Work"

Special Armed Police, Avadi.

Special Armed Police, Avadi

Speech of **Sri S. BALAKRISHNA SHETTY**, B.Sc. (Hons)., I.P., *Inspector-General of Police, Madras, on the occasion of the opening of a new school building, a branch library and inauguration of the Mid-day meals scheme at Sathyamoorthy Nagar, Avadi, on 30th April 1964.*

HON'BLE Chief Minister, Hon'ble Home Minister, Mrs. Sarojini Varadhappan, Ladies and Gentlemen,

We are indeed very happy to invite all of you to this very pleasant function. The history of this developmental area, where the police housing colony has been established, need not be gone through because it was under the auspices of the Chief Minister and the then Chief Minister, Sri K. Kamaraj, that the first stone was laid here. We want to have these frequent functions because they not only give an opportunity to review the progress made from time to time, but also give an encouragement to the people living here that they are not forgotten and that they are continuously in the minds of the authorities and the Government and that their progress is continuously being watched. We are most grateful that the people of the locality have accepted them. This school is a contribution from the Villivakkam Panchayat Union and the Thirumullaivoyal Panchayat Board, jointly, for the development of the boys both from the police families and from others in this area. The start is made mainly due to the initiative taken by the Officers of the Special Armed Police here; and for the last one year, although the building was not established, the school has been running well. We are grateful to the Education Department and its authorities, the Chief Minister, the Home Minister and the Government, for this kind consideration of giving us this building. It is hoped that this building will slowly develop into a High School and very soon not only the building will grow but the educational facilities also will increase. We are most happy that the Chief Minister could find the time for being here and the Home Minister rushed back straight here, more or less, to take part in this function. Mrs. Varadhappan is the *Mathru* of the Madhar Sangams and it is unnecessary for me to tell this audience what she has been doing for us and it is but just and right that she is to inaugurate the mid-day meals scheme here because she has been feeding the policemen's families all the time.

I thank once again all of you for making this function a success by your presence here and your encouragement.

மாநில முதலமைச்சர்

உயர்திரு எம். பக்தவச்சலம் அவர்களின் தலைமையுரை

உள்துறை அமைச்சர் அவர்களே, இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களே, கலெக்டர் அவர்களே, நூலகத் தலைவர் அவர்களே, நண்பர்களே, குழந்தைகளே!

இந்த ஸ்தலத்திற்கு சத்தியமூர்த்தி நகர் என்று பெயர் எப்பொழுது இடப்பெற்றது என்பது பற்றி உங்களுக்கு குறிப்பிட்டார்கள். 8 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு ஒரு பெரிய மகாநாடு கூடியது. அதுதான் காங்கிரஸ் மகாநாடு. சரித்திர பிரசித்தி பெற்ற ஆவடி காங்கிரஸ் இங்கே தான் நடந்தது. உள்துறை அமைச்சர் அவர்கள் கூறியது போல் இந்த காங்கிரஸ் மகாநாட்டிலே தான் நம்முடைய லக்ஷியமான சோஷலிச பாணி சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றினோம். சோஷலிசம் என்றால் எல்லோரும் இன்புற்று வாழக்கூடிய நிலைமையை அமைப்பதாகும். மக்களுக்கு வேண்டிய அவசியமான தேவைகள் உண்பதற்கு உணவு, உடுப்பதற்கு ஆடை, இருப்பதற்கு நிழல், நல்வாழ்க்கை வாழ்வதற்குரிய அறிவு, நோயற்ற வாழ்வு, வாழ்வதற்குரிய வசதிகள், சுகாதார வசதிகள், வைத்தியவசதிகள் ஆகியவை. இவைகள் ஐந்தும் ஒரு சிலருக்கு மட்டும் கிடைத்தால் போதாது. இந்த இன்றியமையாத' தேவைகள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். அதை உணர்த்துவது தான், அதை எடுத்துக் காட்டுவது தான் சோஷலிசம் என்று சொல்லுவது. இப்படி அதற்கொரு சிறிய விளக்கம் கூட உண்டு என்றும் மக்கள் இன்புற்று வாழ வேண்டும் என்றும் அந்த நோக்கத்தோடு அரும்பாடுபட்டு, நாம் அன்னிய ஆட்சியை அகற்றி, சுதந்திரத்தை பெற்று, சுதந்திரத்தை பெற்ற பிறகு, அந்த சுதந்திரத்தை நம்முடைய மக்கள் அனைவரும் ஒன்றாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பயன்படுத்திக் கொண்டு நிரந்தரமான ஒரு சுபீட்சை வாழ்க்கை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு நாம் பாடுபட்டுக் கொண்டு வந்திருக்க ஆவடியிலே காங்கிரஸ் கூடிய போது அப்பொழுது அதற்கொரு விளக்கம் கூறப்பட்டது. மேலும் நம்முடைய தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் தலைமையில் புவனேஸ்வரத்திலே சமீபத்தில் ஒரு காங்கிரஸ் மகாநாடு கூடியது. அந்த காங்கிரஸிலே அந்த சோஷலிசத்தின் லட்சியத்திற்கு ஒரு விளக்கம் கூறியது. ஆவடி மகாநாடு ஒரு நல்ல சரித்திர பிரசித்திபெற்ற மகாநாடு. அப்பொழுதுதான் சத்தியமூர்த்தி நகர் என்று பெயரிடப்பட்டது. அப்பொழுது ஏராளமான மக்கள் இங்கே கூடினார்கள். அப்பொழுது போலீஸார் தான் மிக சிறந்த வகையிலே போக்குவரத்து எல்லாம் சமாளித்து ஒருவித தொல்லையும் இல்லாமல் பணி புரிந்தார்கள். ஆண்டுதோறும் காங்கிரஸ் மகாநாடு நடக்கிறது ஆங்காங்கே. சென்ற காங்கிரஸ் மகாநாடு புவனேஸ்வரத்தில் நடந்தது. ஆனால் இதுவரையிலே இந்த எட்டு ஆண்டுகளில் ஆவடியிலே கூடியமாதிரி பெரிய கூட்டம் எங்கேயும் கூடவில்லை என்று அங்கே போய் பார்த்தவர்கள் எல்லாம் வட நாட்டில் இருந்து வருகின்றவர்கள் கூட சொல்லுகின்றார்கள். அப்படி கூடியபோது போலீஸார்தான் முன்னின்று சமாளித்து நல்ல முறையிலே இதை நடத்தி வைத்தார்கள்.

இதே இடத்திலேதான் இப்பொழுது அவர்களுக்கு ஒரு குடியிருப்பு; அதுவும் விசேஷ ஆயுதம் தாங்கும் படையினருக்காக. அவர்கள் அற்புதமான பயிற்சி பெற்றவர்கள்; திறன் உள்ளவர்கள்; துணிவு உள்ளவர்கள். நம்

முடைய தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் எல்லைப் புறங்களிலெல்லாம் பாதுகாப்பு அளிக்கின்றவர் கள்; மற்றமாநிலங்களுக்கெல்லாம் பாதுகாப்பளிக் கின்றார்கள். அவர்கள் ராணுவத்தினரின் வேலைத் திறமையோடு பாதுகாப்பு அளிக்கின்றார்கள். ''ஆற்றல்மிக்க பாதுகாப்பு'' என்ற பாராட்டுதல் களைப் பெற்றவர்கள். அங்கே போய் பணிபுரிவ தென்றால் எவ்வளவோ கஷ்டங்கள் - சீதோஷ்ண நிலை ஒன்று, ஆபத்து ஒன்று-எதை யும் பொருட்படுத்தாமல் இன்று நம்முடைய விசேஷ ஆயுத போலீஸ் படையினர் மற்ற மாநிலங்களுக்கு சென்று தங்கள் கடமையை துணிவோடு, தியாக உணர்ச்சியோடு செய்து வருகின்றார்கள். இந்த பெருமை இந்த போலீ ஸாருக்கு உண்டு. அத்தகைய போலீஸாருக்கு இந்த இடத்திலே குடியிருப்பு ஏற்பட்டது மிக பொருத்தம். நல்ல ஒரு குடியிருப்பு அமைந் திருக்கின்றது. நாமெல்லாம் பெருமைப்படக் கூடிய அளவிலே அந்த குடியிருப்பு அமைந் திருக்கின்றது. அதோடு மற்றவர்கள் எடுத்துக் காட்டியதுபோல் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஆவடி காங்கிரஸ் நடந்தபோது ஒரு கண் கொள்ளாத காட்சியாக இருந்து அதற்குபின் அந்த ஆவடி காங்கிரஸ் பந்தல் எல்லாம் பிரிக் கப்பட்டபோது ஒன்றுமில்லை. இங்கே காங்கிர ஸுக்கு வந்தவர்கள் காங்கிரஸ் அழகைப் பார்த் தார்கள். ஸ்ரீ சவான் அவர்கள் ஒருமுறை இங்கே இந்த பாதுகாப்பு தொழிற்சாலைகளைப் பார்ப்பதற்கு வந்தார்களாம். அவர்கள் என் னிடம் டெல்லியிலே பார்த்தபோது சொன்னார் கள். ''நான் அங்கே போய் பார்த்தேன். எனக்கு எங்கே காங்கிரஸ் மகாநாடு நடந்தது என்று அடையாளம் தெரியவில்லை, எங்கே பார்த் தாலும் கட்டிடமாயிருக்கிறது. அப்புறம்தான் எந்த ஸ்தலத்திலே காங்கிரஸ் மகாநாடு நடந் தது என்று அவர்களை கேட்டேன்;'' என்று சொன்னார்கள். அப்படி இந்த எட்டு ஆண்டு களிலே நாம் எத்தகைய ஒரு மகத்தான அபி விருத்தி அடைந்திருக்கிறோமென்பதை இந்த ஆவடி ரோடிலே வந்தாலே போதும், கண் குருடாயிருப்பவர்களும்கூட, இரண்டு கண்கள் போயிருக்கிறவர்களும் கூட காணலாம். ஆனால் அதைவிட குருடர்கள் சிலபேர் இருக்காங்க. நம்மிடத்திலே ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை, என்று எப்போது பார்த்தாலும் பஞ்சப்பாட்டு பாடுவார்கள். நல்ல எண்ணம் இல்லாதவர்கள், கெட்ட எண்ணம் உள்ளவர்கள். மற்றவர்களை யும் கெடுக்கப் பார்க்கின்றார்கள்.

பள்ளிக்கூடம் வச்சிருக்கோம் என்றால் படிக் காதே என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். அந்த காலத்திலே இரணியன் இருந்தான். அவ னுடைய சொந்த பிள்ளையை படிக்காதே என்று சொன்னான். ஆனால் பெற்ற தகப்பனாயிருந்தா லும்சரி அவன் கேட்கவில்லை. எப்படி கேட்பான்? கெடுதலுக்கு வழி காட்டினால் எவனும் கேட்க மாட்டான். ஆனால் நம்மிலே சிலபேர் ஏமாந் தவர்கள் இருக்கின்றார்கள். முட்டாள்கள் இருக்கின்றார்கள். யாரோ வேணுமென்று நம்மை கெடுக்கறதுக்கு பார்க்கிறார்கள் என்றால் அதற்கு உட்படக்கூடிய அறியாமை ஒன்று இன்னும் இருக்கின்றது. அந்த அறியாமை போக்கு வதற்குத்தான் நல்ல பள்ளிக்கூடங்கள் எல்லாம் கட்டுகிறோம். ஏதோ வயது வந்தவர்களில் சில பேர்கள் முட்டாள்கள் இருக்கின்றார்கள். தவறு தல்களிலே ஈடுபடக்கூடியவர்கள் இருக்கிறார் கள். இதெல்லாம் நம் முற்காலத்தில் நல்ல கவனம் செலுத்தாத ஒரு காரணத்தினால்தான். இன்னும் நம்முடைய நாட்டிலே ஒரு பக்கத் திலே இந்த குறை. அழிவு சக்திகளுக்கு இரை யாகின்றவர்கள் இன்னும் இருக்கின்றார்கள். இதெல்லாம் நாம் முன்பு கவனிக்காதது ஒரு குறை. அவர்கள் கவனிக்கப்படாதது ஒரு குறை. குழந்தைப் பருவத்திலிருந்தே நல்ல பள்ளிகளை வைத்து அறிவை புகட்டி நல்ல ஒழுக் கத்தை தோற்றுவித்தால் இம்மாதிரி யெல்லாம் இருக்காது என்பதை நாம் எல்லோரும் நன்றாக உணர்ந்திருக்கின்றோம். ஆகவே தான் எங்கு பார்த்தாலும் கிராமங்களில் எல்லாம் பள்ளிக்கூடங்கள் மட்டுமல்ல அதற்கு தகுந்த கட்டிடம் மட்டுமல்ல, அதில் பிள்ளை கள் பசியினாலே வாடுகின்றபோது, அவர்

களுக்கு அறிவு போதிய அளவு அவர்கள் மனதிலே படியாது, ஆகவே உணவும் அளிக்க வேண்டும், சீருடை வழங்கவேண்டும், பள்ளிக்கூடம் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்ற வகையில் நாம் ஈடுபட்டிருக்கின்றோம். இன்று இந்தபள்ளியிலே மதிய உணவு அளிக்க ஏற்பாடு செய்திருக்கின்றீர்கள். மதிய உணவுக்காக தமிழ் நாட்டிலுள்ள ஆரம்ப பள்ளிக்கூடங்களில் மட்டும் இந்த வருடம் அரசாங்கம் செலவு செய்ய முற்பட்டிருந்தது, 1 கோடி 68 லட்சம் ரூபாய். சாப்பாடு, ஏழைக்குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் உள்ள எல்லா பேருக்குமல்ல. சராசரியிலே மூன்றிலொரு பங்கு குழந்தைகளுக்காகவே மதிய உணவு அளிப்பதற்கு சர்க்கார் செலவு செய்வது 168 லட்சம். ஆனால் மற்றவர்கள் கொடுப்பது எப்படி ஆவடி பஞ்சாயத்து, திருமுல்லைவாயில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் இவைகளில் எல்லாம் அக்கறை எடுத்துக் கொள்ளுகின்றார்களோ அம்மாதிரி மக்கள் கொடுக்கிறது 1 கோடி 10 லட்சம். ஆரம்ப பள்ளியிலே மட்டும் சாப்பாட்டிற்கு 1 கோடி 68 லட்சம் அரசாங்கம் கொடுக்கிறது. 1 கோடி 10 லட்சம் மக்கள் கொடுப்பதோடு 2 கோடியே 78 லட்சமாகிறது. அதோடு அமெரிக்காவிலிருந்து கேர் ஸ்தாபனம் கொடுக்கின்றார்கள். பால்பவுடர் எல்லாம் அது குழந்தைகளுக்காக நமக்கு இலவசமாக கொடுக்கின்றார்கள். அதை விநியோகிப்பதற்கும் 20 லட்சம் ரூபாய் ஆகிறது. இது இல்லாமல் கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் அரிஜன இலாகாவின் மூலம் பள்ளிகளுக்கும் ஹாஸ்டலுக்கும் செலவு செய்கிறோம். இன்னும் கேர் ஸ்தாபனம் அவைகளுக்கு கூட பால் பவுடர் எல்லாம் கொடுக்கிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். பள்ளிக்கூடம் இல்லாத கிராமம் இல்லை இன்றைய தினம்.

சில நாட்களுக்கு முன் டெல்லியிலே மற்ற மாநில அமைச்சர்களெல்லாம் கூடி யிருந்தார்கள். மத்திய அரசாங்க அமைச்சர்களெல்லாம் கூடியிருந்தார்கள். நல்ல முறையில் படிப்பு சொல்லி கொடுக்கவேண்டும். கிணற்றுத் தவளையாக இருந்தால் போதாது. ஆங்கிலம் இன்று உலக மொழி. அதை மூன்றுவது வகுப்பிலிருந்து நாங்கள் சொல்லி கொடுக்கிறோம் என்று மற்ற தென்பக்கத்திலுள்ள சில மாநிலங்களிலே சொன்னார்கள். சரி ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிறது நல்ல முறையிலே சொல்லி கொடுக்கவேண்டும். அதற்கெல்லாம் பயிற்சி இருக்கிறதா ? ஒரு அந்நிய மொழியை குழந்தைப் பருவத்திலே சொல்லிக் கொடுக்கறதுக்கு அதற்கு என்ன செய்வது என்றெல்லாம் பேசினார்கள். அப்போது நான் அவர்களுக்குச்சொன்னேன். தமிழ் நாட்டிலே இப்போதே நல்ல முறையில் அதற்கு தேர்ந்தவர்கள், பிரிட்டிஷ் கவுன்சில் சார்ந்தவர்களை வைத்து 28,000 ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் நல்ல முறையிலே இளம் வயதிலே ஆரம்ப பள்ளியிலே சொல்லிக்கொடுக்கிறது, எல்லா பயிற்சி அளிக்கிறோம் என்று சொன்னேன். எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். மற்ற மாநிலங்களிலெல்லாம் இனிமேல் தான் அதையெல்லாம் செய்யணும். 28,000 ஆசிரியர்களுக்கு போதனை பயிற்சி செய்வதற்கு கூட நாம் முன்னமே ஏற்பாடு செய்து விட்டோமே என்பது அவர்களுக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. அப்புறம் ஒவ்வொருவராய் வந்து என்ன செய்வது, எப்படி செய்வது என்று எங்களுக்கு எழுதி கொடுங்கள், என்றெல்லாம் கேட்டார்கள். அவ்வாறு மற்றவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டான முறையிலே கல்வித்துறையில் நாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகின்றோம். குறைந்தபட்சம் உயர்நிலைப்படிப்பு அளிக்கவேண்டும் என்பது கிராமங்களில் உள்ளவர்கள் எல்லாம் உணர்ந்ததினால் தான் இப்போது எங்கே பார்த்தாலும் உயர்நிலைப்பள்ளி வேண்டும் என்று கேட்கின்றார்கள். இந்த ஏப்ரல் மாதம் இறுதி, மே மாதம், ஜூன் மாதமானால் வேறு எந்த பெடிஷனும் வருவதில்லை. எங்களுக்கு உயர்நிலைப்பள்ளி வேணும் என்றுதான் கேட்கிருங்க. நேற்று ஒரு கிராமத்திற்கு போயிருந்தேன். பணத்தை கொண்டு வந்து கொடுக்கிருங்க உயர்நிலைப் பள்ளிக்கு நாங்கள் முன்னே டெபாஸிட்டாக கொடுக்கிறோம் என்று. இங்கே உயர்நிலைப்பள்ளி இந்த

கிராமத்திலே துவக்க வேண்டுமென்று கூறுகின்ருர்கள். அப்படி ஒரு விழிப்பு இருக்கிறது.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய குழந்தைகளுக்கு நாம் விசேஷமாக கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் படிப்பதிலே விசேஷ கவனமில்லை. விசேஷ வசதிகள் அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்ருேம். அதிலும் போலீஸ் படையினர் போலீஸ் படையிலே விசேஷ ஆயுதம் தாங்கும் போலீஸ் படையினர் அவர்கள் எங்கே அவசியம் இருந்தாலும் அங்கே போய் வேலை செய்யணும். மனம் கோணுமல் வேலை செய்கின்ருர்கள். நம் மாநிலத்துக்கு அப்பாலும் தங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை கூட பொருட்படுத்தாமல் போய் வேலை செய்கின்ருர்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு தொல்லை இருக்கக்கூடாது. அவர்களுக்கு வசதி இருக்க வேண்டும். நல்ல குடியிருப்பு, மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், எல்லோருக்குமா அம்மாதிரி கட்டி விட்டிருக்கிருேம். எத்தனையோ பேர்கள் திண்டாடுகிருர்கள். எத்தனைபேர் இன்னும் வராங்க. எப்படியாவது அகாமடேஷன் கண்ட்ரோலரிடம் சொல்லி எங்களுக்கு அந்த வீட்டை கொடுங்கள் என்று கேட்கிருங்க. அதுக்குகூட கஷ்டமாயிருக்கு. வீட்டு சொந்தக்காரங்க ஏதோ சொல்லி எங்களுக்கு வேணும் என்று கேட்கிருங்க. நேற்று ஒரு வீட்டைப்பற்றி வந்தது. சொந்தக்காரர் அவர்களுடைய கஷ்டத்தை சொல்ருங்க. என்னுடைய மனைவிக்கு சீக்கு, அந்தவீடு வேணும்னு அவங்க வந்து கேட்கிருங்க. யார் யார் கேட்கிருங்க, என்ருல் நாலு ஐந்து பெரிய அதிகாரிகள் அவர்களுக்கு வீடு, வாடகைக்கு கேட்கிருங்க. இப்படி தொல்லை இருக்கின்றது. அதிகாரிகளே வீடு இல்லாமல் அல்லல்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. எல்லோருக்கும் கட்டிவிடவில்லை. ஆனுல் போலீஸார் விஷயத்தில் மட்டும் நாம் விசேஷ கவனம் செலுத்தி நமது லட்சியம் நூற்றுக்கு 80 சதவிகிதம் உள்ள அதிகாரிகளுக்கு முன்னே வீடுகட்டி விடவேண்டுமென்று வேகமாக நாம் கட்டிக்கொண்டு இருக்கின்ருேம். அவ்வளவு வேகம் மற்றதில் எல்லாம் இல்லை அதிலும் இந்த விசேஷ ஆயுதபடை போலீஸாருக்கு முதன்மையான கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இங்கே இம்மாதிரி இந்த இடம், நல்ல இடம் அதுவும் ஆவடியிலே அந்த காங்கிரஸ் மகாநாடு நடந்த இடம் உகந்தது என்று முன்னமே இதற்கு அடிக்கல் நாட்டவந்தபோது நாங்கள் கூறினேம். மிகப் பொருத்தமாகவே இதை இந்த விசேஷ ஆயுதப் படையினருக்கு இந்த குடியிருப்பு வேண்டுமென்று நல்ல முறையிலே குடியிருப்பு கவனிக்கப்பட்டிருக்கிறது.

குடியிருப்பு திட்டம் மட்டும் நிறைவேற்றிவிட்டால் போதாது. மற்ற வசதிகளும் வேண்டும். ஆகவே பள்ளிகள் கட்டணும். நல்லா கட்டணும். இதிலே பஞ்சாயத்து யூனியன் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியன், திருமுல்லைவாயில் பஞ்சாயத்து, ஆவடி பஞ்சாயத்து எல்லோரும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கின்ருர்கள். இப்பொழுது எத்தனை தொழிற்சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் இடம் போதவில்லை. இன்னும் இப்படியே போனுல் திருவள்ளுர் தாண்டி போனுலும் அரக்கோணம் வரைக்கும் போகவேண்டியிருக்கின்றது. பின் அரக்கோணம் வரைக்கும் ரோடு சரியா போட்டுவிடுவார்கள். இண்டஸ்டரியல் எஸ்டேட் வந்துவிட்டது. ஆவடியிலே பாருங்க. எத்தனை தொழிற்சாலைகள் இதெல்லாம் நாம் சுதந்திரம் அடைந்து நாமெல்லாம் வேகமாக நம்முடைய முன்னேற்றத்தில் அக்கறை எடுத்துக்கொண்டதனுல் அல்லவா ஏற்படுகிறது. புதிது புதிதாக வந்துக் கொண்டிருக்கிறது. இப்படி வந்து கொண்டிருந்தால் மக்களுக்கு ஒரு செழிப்பு ஏற்படுகின்றது. சில பேர் தவறுதலாக நினைக்கிருர்கள். போலீஸாருடைய தேவையெல்லாம் வறுமை நாட்டிலே தான் எல்லா குற்றங்களும் நடக்கும். ஆனுல் மேல்நாடுகளை பார்த்தால் எங்கே செழிப்பு இருக்கிறதோ, அங்கு குற்றங்கள்கூட அதிகமாயிருக்கின்றது. ஆனுல் அவர்களை நாம் காப்பி அடிக்கணும் என்று நான்


சொல்லவில்லை. குற்றங்களைக் குறைக்கணும், குற்றங்களின் மனப்பான்மைகள் அறவே அகற்றப்பட வேண்டும்.

ஆனால் செழிப்பு ஏற்பட ஏற்பட பாதுகாப்பும் வேண்டும். பாதுகாப்பு இல்லாமல் மற்றதெல்லாம் இருந்து என்ன பிரயோசனம். அமைதி இல்லையென்றால் எவ்வளவுதான் சம்பாதித்தால் என்னவாகும். ஆவடி தொழிற்சாலையிலே பாரசூட் பேக்டரியிருக்கு. 4000 பேர் தைக்கிறாங்க. இதை தைக்க அங்கே ஆண்கள் பெண்கள் உட்கார்ந்து 4000 ஸ்டிச்சிங் மிஷின் வைத்துக்கொண்டு தைக்கிறாங்க. தையல் இயந்திரத்தை வைத்துக்கொண்டு அந்த தையல் இயந்திரத்திலே தைக்கிறவர்களுக்கு எல்லாம் மூன்று ரூபாய், நாலு ரூபாய் கூட வருகிறது. 120 ரூபாய் 150 ரூபாய் மாதம் வாங்குகிறார்கள். ஆவடி காங்கிரஸுக்கு முன் அம்பத்தூர் சைகில் பேக்டரி ஒன்றுதானே இருந்தது. அப்புறம் என்ன பேக்டரி இருந்தது. வேறே ஒன்றும் இல்லை. அப்புறம் இந்த எஸ். ஏ. பி. க்காக உங்களுக்காக கட்டிடத்தை வாங்கி பாதிவரை கொடுத்துவிட்டு பாதி இந்த ட்யூப் லிமிடெட்டுக்குகொடுத்தோம். ட்யூப் லிமிடெட் கட்டிடம் வந்தது. அதோடு அப்புறம் எத்தனை தொழிற்சாலைகள் வந்திருக்கின்றது ? அதோடு மற்ற கல்வி ஸ்தாபனங்கள் பாலிடெக்னிக், ஹைஸ்கூல், வில்லிவாக்கம் ஹைஸ்கூல் கூட இந்த ரோடு பக்கத்தில். எவ்வளவு நல்ல கட்டிடம் ; லட்சம் ரூபாய் செலவு செய்து அந்த வில்லிவாக்கம் ஹைஸ்கூல் சிங்காரம் பிள்ளை பள்ளிக்கூடம் என்று முன்னே கிராமத்திலே இடம் இல்லாமல் இருந்தது. இப்போ லட்சம் ரூபாய் செலவு செய்து அந்த கட்டிடம் கட்டியிருக்கின்றார்கள். செழிப்பு ஏற்பட்டது என்றால் அமைதியும் வேண்டும். அமைதியில்லாமல் செழிப்பு இருந்து என்ன பிரயோசனம். நிம்மதியேயில்லை. ராத்திரியில்போய் படுத்தால் யார் என்ன பண்ணுவானோ, எங்கு கொள்ளையடிப்பாங்களோ, என்ன ஆகுமோ என்று தூக்கம் வருவதில்லை. அல்லது யாரோ இன்னைக்கு ரயிலுக்கு போனாங்க திரும்பி வரவரைக்கும் ஆபத்து. திரும்பி வருவாங்களா என்று சந்தேகப்படக்கூடிய அளவிலே மற்ற நாடுகளிலெல்லாம் நிலைமை.

நம் நாட்டிலே அதேவிதமான சிக்கல்கள். எத்தனை பிரச்னை இருந்தாலும் எத்தகைய சிக்கலான பிரச்னைகள் ஏற்பட்டாலும், எத்தகைய நாசசக்திகள் நடமாடுகின்றது என்றாலும் அவைகளையெல்லாம் சமாளித்து மக்களுக்கு ஒரு அமைதியை அளிக்கவேண்டும். மக்கள் இன்புற்று வாழ வேண்டும். மக்களுடைய வாழ்க்கைத்தரம் ஒரு புறம் உயர அதோடு மக்கள் அமைதியும் பெற்று இன்புற்ற வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நோக்கத்திலே இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. அதிலே போலீஸாருக்கு மிகவும் முக்கியமான ஒரு இடம் உண்டு என்பதை நீங்கள் எல்லோரும் உணர்ந்து இருக்கின்றீர்கள். ஆகவே போலீஸாருக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுப்பதோடுகூட மேலும் அவர்களுக்கு க்ஷேமநல வேலைக்கெல்லாம் திட்டங்களெல்லாம் வைத்துக்கொண்டு பிரத்தியேகமாக அது நிறைவேற்றப்பட்டு வருகிறது. போலீஸ் இலாகாவிலும் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களுக்கென்று நிதியைத் திரட்டி அரசாங்கம் ஓரளவு உதவி அளித்து அந்த நிதியைக் கொண்டு குடும்பங்களுடைய நலனும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. அதோடு கூட இன்று திரு. புருஷோத்தம முதலியார் அவர்கள் கூறினார்கள். இந்த போலீஸாருடைய க்ஷேமநலத்துக்காக வேறு ஒரு நிதி இருக்கிறது, க்ஷேமநல நிதி. அதிலிருந்தும் நாங்கள் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கின்றேன். ஆனால் எவ்வளவு கொடுத்தாலும் போலீஸாருடைய குடும்பங்களின் நலனுக்கு போதும் என்று சொல்வதற்கில்லை. அந்த வகையிலே அவர்கள் உதவித் திட்டம் கொண்டுவந்ததையும் நான் பாராட்டுகின்றேன்.



Entrance to the School
Satyamurthi Nagar, Avadi.



Hon'ble Sri M. BHAKTHAVATSALAM,
Chief Minister of Madras, presiding over the function.

இங்கே நூலகம் அமைக்கப்பட்டிருக்கின்றது. நூலகக் குழு தலைவர் திரு. புருஷோத்தம முதலியார் அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன், ஆற்றலுடன் ஜில்லாவில் பல நூலகங்கள் அமைத்து இருக்கிறார்கள். ஆஸ்பத்திரியிலே நூலகம் இருக்கிறது. போலீஸ் நிலையத்திலும் நூலகம் கட்டாயம் இருக்கவேண்டும். ஏனென்றால் போலீஸார் வேலை செய்வதென்றால் உலகத்தை அறிந்து கொள்ள வேண்டும். அறிவு பெற வேண்டும். அறிவு இல்லாத ஒரு காரணத்தினால்தான் தவறு ஏற்படுகின்றது. ஆங்காங்கே தவறுதல்கள் ஏற்படுகின்றது என்றால் புகார்கள் வருகின்றன என்றால் பெரும்பாலும் புகார்கள் மிகைப்படுத்தப்படுகின்றன. அதோடு புகார்கள் மிகைப்படுத்துவதும் உண்டு என்பது எங்களுக்கு தெரியாமல் இல்லை. ஆனால் சில வகையிலே உண்மையாகவே தவறுதல்கள் நடக்கிறது. தவறுதல்களை போலீஸார் ஏன் செய்கிறார்கள்? இவ்வளவு சிறந்த ஒரு சேவை புரிகின்றவர்கள் தங்களுடைய உயிரைக் கூட திரணமாக மதித்து சேவை புரிகின்றவர்கள், ஏன் தவறுதல் செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு போதிய அறிவு இல்லை. இப்பொழுது பிள்ளைகளெல்லாம் படிக்க, நல்ல ஒழுக்கம், இதெல்லாம் ஏற்பட நல்ல பள்ளிக்கூடம் கட்டியிருக்கிறோம். அப்பொழுது அப்படிப்பட்ட வசதி இல்லை என்றாலும் இப்பொழுதாகிலும் நல்ல அறிவு பெற வேண்டும். அதற்குத்தான் அந்த புத்தகங்கள் எல்லாம் வைத்து ஊர் விவகாரங்கள் உலக விவகாரங்கள் இவையெல்லாம் தெரிந்துக்கொள்ள வேண்டும். புத்தகங்களை படிக்கட்டும் என்று போலீஸாருக்கு குடியிருக்கும் இடத்திலே இம்மாதிரி நூலகம் வைப்பது நல்ல பொருத்தமென்றே நான் கருதுகின்றேன். அம்மாதிரி நூலகம் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு மேலும் மேலும் இந்த சத்தியமூர்த்தி நகர் சிறப்பு பெற்று வருகின்றது. இந்த விசேஷ போலீஸ் படையினருடைய குடியிருப்பை பொருத்த மட்டில் அதுவும் மேலோங்கி வளர்ந்துக் கொண்டு வருகின்றது. பிள்ளைகளை எல்லாம் தவறாமல் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப விரும்புகின்றோம். ஆனால் இவைகளெல்லாம் போலீஸ்காரர்களுக்கு என்று அப்படி ஒரு மட்டம் தட்டுவதற்கு இல்லாமல் மற்ற குழந்தைகளும், பக்கத்தில் திருமுல்லைவாயில், மற்ற பக்கத்திலிருக்கின்ற குழந்தைகளும் சேர்ந்து படிக்க வைப்பதுதான் நல்லது. எப்போதும் நாம் பிரிந்து பிரிந்து இருக்கின்ற ஜாதி போய் புதிய ஒரு ஜாதி வருகிறது. அதற்கெல்லாம் இடம் கொடுக்கக் கூடாது. அந்தவகையிலே மற்ற குழந்தைகளையெல்லாம் சேர்த்துவைத்தாலும் பெரும்பாலும் போலீஸ் குழந்தைகள். இந்த குழந்தைகள் எல்லாம் நன்றாகப்படிக்கணும். படித்துத் தேற வேண்டும். உயர்ந்த அறிவு பெறவேண்டும். அதற்குரிய வகையிலேதான் மிக அழகாக இந்தக் கட்டிடம் கட்டப்பட்டு இருக்கின்றது. ஆகவே பலவகையில் சிறப்புவாய்ந்த இந்த விழாவில் கலந்துக் கொள்வதில் எனக்குள்ள மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுதலும் நல்வாழ்த்துக்களும் கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகின்றேன்.


உள்துறை அமைச்சர்

திரு. கக்கன் அவர்கள் ஆற்றிய உரை

தலைமை தாங்கும் மதிப்புக்குரிய மாநில முதலமைச்சர் அவர்களே, அன்பார்ந்த பெரியோர்களே, தாய்மார்களே, சகோதரர்களே, நமது காலம்சென்ற தமிழகத்தின் தனிப் பெரும் தலைவர் கனம் சத்தியமூர்த்தி அவர்களின் பெயரால் வழங்குகின்ற இந்த நகரத்திலே ஸ்பெஷல் ஆம்டு போலீஸில் பணி செய்கின்ற அன்பர்களுடைய குழந்தைகளுக்காகவும், இன்னும் இதர குழந்தைகளுக்காகவும், பாடசாலை ஒன்று கட்ட வேண்டுமென்று திட்டமிட்டு நல்ல முறையிலே 77,000 ரூபாய் செலவு செய்து கட்டி முடிக்கப்பட்ட இந்த பள்ளிக் கட்டிடத்தை இப்போது நான் திறந்துவைக்கின்றேன். அங்கே சென்று கதவுகளை திறப்பதில்லை, இங்கேயே திறப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள். இப்போது இந்த புஸ்தகத்தை எடுப்போமானால் இந்த பாடசாலை திறக்கப்படும். முதலிலே அந்தப் பணியை செய்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். பாடசாலையையும், லைப்ரெரியையும் திறந்து வைக்கிறேன். (பாடசாலையும், நூலகமும் திறக்கப்பட்டது).

மதிப்புக்குரிய மாநில கனம் முதலமைச்சர் அவர்களே, ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் அவர்களே, திரு. ஷெட்டி அவர்களே, மாவட்ட கலெக்டர் அவர்களே, மதிப்புக்குரிய புருஷோத்தம முதலியார் அவர்களே, அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

ஊழியனாகிய நான் மக்களுக்காக தேசத்திற்காக ஊழியம் செய்யும் நண்பர்களுடைய குழந்தைகள் படிப்பதற்காக இந்த பாடசாலையை திறந்து வைக்கின்றேன். அதையொட்டி ஒரு வாசகசாலையும் திறப்பதற்கு ஒரு வாய்ப்பு மதிப்புக்குரிய ரூரல் லைப்ரெரி சேர்மன் திரு. புருஷோத்தம முதலியார் அவர்கள் கொடுத்து விட்டார்கள். இந்த பாடசாலையை கட்டுவதற்காக நல்ல முறையிலே பாடுபட்டு சிறப்பாக கட்டிமுடித்த இன்ஜினியர்களுக்கும் குறிப்பாக ஸ்பெஷல் பில்டிங் சீப் இன்ஜினியர் அவர்களுக்கும், சூபரின்டென்டிங் இன்ஜினியர் அவர்களுக்கும், எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர் அவர்களுக்கும் என் பாராட்டுதல்களை தெரிவித்துகொள்கின்றேன். நமது மாநிலத்திலே குறிப்பாக இன்ஜினியர்கள் நல்ல வேலை செய்து பல ஆக்க வேலைகள் செய்ததின் காரணமாக திட்டங்கள் வெகு விரைவாக முடிந்து இருக்கின்றன. அவர்கள் செய்கின்ற வேலையை இதர மாகாணத்து மக்களும் பாராட்டுவதை நாங்கள் அறிவோம். ஆகவே அவர்கள் நல்ல முறையிலே இதர வகை வேலைகள் செய்தாலும் இப்படி கல்விக்காக கட்டப்படும் பாடசாலையை சிறப்பாக, அதுவும் அதிகாரிகள் பக்கத்திலிருந்து கட்டி முடித்து குழந்தைகள் படிப்பதற்கு தக்க ஏற்பாடு செய்தது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த கட்டிடத்தை கட்டிய அன்பர்களுக்கு எல்லாம் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த பாடசாலை குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுப்பதற்காக பஞ்சாயத்து யூனியன் சேர்மன் ஏற்பாடு செய்து இருக்கின்றார்கள். திருமுல்லைவாயில் பஞ்சாயத்தும் ஓரளவு உதவிசெய்து இருக்கின்றது. நம்முடைய மாநிலத்திலே வருகின்றவருமானத்திலே நமது மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் ஏற்று நடத்தும் கல்வி இலாகா இந்த வருட வரவு செலவு திட்டத்திலே 31 கோடி ரூபாயும் சொச்சமும் மானியமாக பெற்றது. அதோடு நான் வகிக்கின்ற அரிஜன நல இலாகா மூலமாக கிட்டத்தட்ட கல்விக்காக 2 கோடி ரூபாய் செலவழிக்கின்றோம். அதை சொல்லப் போனால் நம் மாநிலத்திலே வருகின்ற வருமானத்திலே நாலில் ஒரு பங்குக்கு அதிகமாக கல்விக்



Hon'ble Sri P. KAKKAN,

Home Minister of Madras inaugurating the School.



Hon'ble Sri P. KAKKAN,

Home Minister of Madras inaugurating the library.

காக நாம் செலவு செய்கிறோம். இவ்வளவு ரூபாயை செலவு செய்து பல ஆரம்ப பாடசாலை கள், உயர்தர ஆரம்ப பாடசாலைகள், உயர்நிலைப் பள்ளிகள், அதோடு மட்டுமில்லாமல் பல கலைக் கல்லூரிகளும், வருடந்தோறும் ஏற்படுவதை பார்க்கின்றீர்கள். வருடத்திற்கு 200 உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேலே நம்முடைய மாநிலத்திலே கல்விக்காக அதுவும் குறிப்பாக கிராமங்களி லெல்லாம் குழந்தைகள் ஹைஸ்கூல் படித்து உயர்நிலை பெறவேண்டுமென்று ஏற்பாடு செய் கிறோம். இந்த வாய்ப்பு நமக்கு முன்பு கிடை யாது. காலம் சென்ற தனிப்பெரும் தலைவர் கனம் சத்தியமூர்த்தி அவர்களும், இங்கே இருக் கின்ற நம்முடைய மக்கள் தலைவரும், இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்து பணியாற்றி வருகின்ற மாபெரும் தலைவர்களும் பாடுபட்ட காலத்திலே இந்த வாய்ப்பு கிடையாது. முன்பெல்லாம் பெரிய கிராமத்திலே ஒரு பாடசாலை இருக்கும். அந்த பாடசாலையிலே 20, 30 மாணவர்கள்தான் வருவார்கள். படிக்கவைக்கிற எண்ணமே பெற்றோர்களுக்கு அன்று கிடையாது. இன்று ஏழைகளாயிருந்தாலும், பெற்றோர்களுக்கு தம் குழந்தைகள் கட்டாயமாக படிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. இந்த எண்ணம் வருவதற்கு முக்கிய காரணம் நம்முடைய நாடு சுதந்திரம் பெற்றது தான். நமது நாட்டிலே மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. அந்த ஆட் சியை நல்ல முறையிலே நடத்துவதற்கு பாடுபட நம்முடைய தலைவர்கள் இருக்கின்றார்கள். அவர் களுடைய சேவையே இதற்கு முக்கிய காரணம் என்று மக்கள் தலைவர் மாஜி முதல் மந்திரி அவர் கள் தலைமையிலே இங்கே இருக்கின்ற கனம் இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் அஸ்தி வாரம் இட்டு இந்த ஆவடியில் இந்த பணியை செய்தார்களோ, அதுமுதல அது நாளொருமேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து நல்ல ஆக்க வேலையையும் செய்து வருவதை நீங்கள் கண் கூடாக இன்று பார்க்கிறீர்கள். குழந்தைகள் நன்கு படிக்க வேண்டும். குறிப்பாக தமிழகத் திலே முன்பெல்லாம் வாத்தியார் மகன் வாத்தி யார்தான், போலீஸ்காரர் மகன் போலீஸ்காரன் தான் என்ற நிலை இருந்தது. ஆனால் இப்போது அந்த சொல்லையெல்லாம் மாற்றி விட்டோம். உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கோல் தான் மிச்சம் என்று அந்த காலத்தில் கூறுவார்கள். இப்போ உழவனுக்கு ஜாஸ்தி. முதலாளிக்கு கொஞ்சம். அதேமாதிரி இங்கே ஸ்பெஷல் ஆம்டு போலீஸ்லே வேலை செய்தாலும் சரி, அல்லது இதர போலீஸ் படையிலே வேலை செய்தாலும்சரி, அல்லது அரசாங்கத்திலே வேறு எந்த துறையில் வேலை செய்தாலும் சரி அவர்கள் குழந்தைகள நன்றாக படித்து அவர்களுடைய தகப்பனார்களை காட்டிலும் உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டு மென்று அரசாங்கம் ஏற்பாடு செய்துக் கொண்டு வருகிறது. இதை கண்கூடாக நாம் பார்க்கிறோம். சொல்லப் போனால் அதற்கு நானே ஒரு எடுத்துக் காட்டு. அதனாலே நம்முடைய நாட்டிலே குழந் தைகள் படித்து உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். நாட்டிலே அவர்கள் நல்ல பொறுப்பினை வருங் காலத்திலே ஏற்றுக்கொள்ள வேண்டும். நம் முடைய நாட்டிலே போட்ட திட்டங்களை நல்ல முறையிலே இன்றைக்கு பெரியோர்கள் நடத்தி னாலும் அந்தப் பொறுப்பினை பின்னால் நடத்தி நாட்டின் பொருளாதார திறனை பூரணமாக பெரி தும் பெறுவதற்கு அவர்களெல்லாம் முன் வர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இப்படிப் பட்ட சிறந்த வேலைகளை அரசாங்கம் செய்து வரு கின்றது என்பதை உங்கள் மத்தியிலே நான் தெரி வித்துக் கொள்ளுகின்றேன். 11 ஜில்லாக்கள் நமது மாநிலத்தில் உள்ளன. அவற்றுள் 325 பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன. இந்த பஞ்சாயத்து யூனியன் வாயி லாக பல ஆரம்ப பாடசாலைகள் நடைபெறு கின்றன. முன்பெல்லாம் பஞ்சாயத்து போர்டு தலைவருக்கு பாடசாலையை பார்ப்பதற்கு அதிகா ரம் கிடையாது. அந்த ஊரில் பாடசாலையை பார்ப்பதற்கு பஞ்சாயத்து போர்டு தலைவர் சென்று ஏன் நீங்கள் பிந்தி வருகிறீர்கள் என்று ஆசிரியர்களை கேட்டால், நீங்கள் என்ன கேட் கிறது, சர்க்கார் பள்ளிக்கூடத்தில் நான் வரும் போது வருவேன் என்றெல்லாம் கூறுவார்கள். இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட

பிற்பாடு அந்த பஞ்சாயத்து போர்டு தலைவருக்கும், பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களுக்கும் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த வாய்ப்பு மக்கள் அரசாங்கத்திலே மக்களுடைய நன்மையை கவனிப்பதற்கு அந்த ஊரிலே பஞ்சாயத்துபோர்டு பிரெசிடென்டு அவர்களும் அங்கத்தினர்களும் தங்கள் கடமையை செய்வதின் மூலமாக அதிகாரத்தையும் அடைய வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின்றது. இப்போது நம்முடைய மாநிலத்திலே பாடசாலை இல்லாத கிராமம் கிடையாது. பஞ்சாயத்துபோர்டு இல்லாத ஊரும் கிடையாது. கூட்டுறவு சொஸைட்டி இல்லாத ஊரும் கிடையாது. 100-க்கு 100 பண்ணிவிட்டோம். மேலும் செய்ய வேண்டும். இந்த உயர்நிலை பள்ளிகள் பல ஏற்பட்டாலும் இன்னும் சில இடங்களிலே சில உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்த வேண்டும் என்று இருக்கின்றது. அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தக்க திட்டமிட்டு அங்கெல்லாம் உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு பாடுபட்டுவருகிறார்கள். நாமெல்லாம் இப்படிப்பட்ட நல்ல காரியம் செய்யும் போது கிராமத்தில் இருக்கும் மகாஜனங்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து மேலும் பல நன்மைகளை அடைவதற்கு முன் வர வேண்டும். நாடு உயர்ந்தால் தான் நாம் உயர்வோம். நாடு உயராவிட்டால் நாம் உயரமாட்டோம். சில பேர் நாடு எக்கேடு கெட்டு போனாலும் போயிட்டுபோகுது, நாம் மட்டும் நல்லா இருந்தால் போதும், என்னுடைய பெண்டு பிள்ளைகள் நல்லாயிருந்தால் போதும், என்ற எண்ணமுடையவர்களாக இருக்கின்றார்கள். அவ்வாறு இருப்பது நல்லதல்ல. நம்முடைய நாட்டை உயர்த்துவதற்கு நாம் எல்லோரும் பாடுபடவேண்டும். நாடு உயர நாம் உயர்வோம் என்றநல்லெண்ணத்தோடு பணியாற்றகுறிப்பாக இந்தவட்டார மக்களையும் இங்கே ஸ்பெஷல் ஆம்டு போலீஸிலே வேலை செய்கின்ற அன்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நாடு உயர்ந்தால் தான் நாம் உயர்வோம் என்ற நல்லெண்ணத்தோடு நம்முடைய கடமையையும் செய்யவேண்டும். வரப்பு உயர நீருயரும், நீர் உயர நெல் உயரும், என்று ஔவையார் அந்த காலத்தில் பாடினார்கள். அந்த மாதிரி நாடு நல்லா இருந்தால்தான் நமக்கு வேண்டிய எல்லா வசதிகளும் கிடைக்கும். வீட்டு வசதி, சம்பள கூடுதல், இன்னும் பல வசதிகளை ஏற்படுத்துவதற்கு நாட்டை நல்ல முறையிலே நாம் உயர்த்தவேண்டும். நாம் போட்டிருக்கின்ற திட்டங்களை சிறப்பாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவதோடு அந்த திட்டம் நிறைவேறுவதற்கு நாம் பக்கத் துணையாய் இருந்து நம்முடைய நல்லாசி நல்ல அன்பு ஆதரவு எல்லாம் கொடுக்கவேண்டும். காங்கிரஸ் செஷன்ஸ் நடந்த இந்த ஆவடியிலே அப்போது சோஷலிச தீர்மானத்தை நிறைவேற்றினோம். இப்போது நடைமுறையில் நடத்துவதற்காக ஏற்பாடுகள் செய்துக்கொண்டு இருக்கின்றோம். அதுவும் ஜனநாயக முறையில் சோஷலிசம் பெற வேண்டும். இதெல்லாம் வருமா என்று ஒரு சிலர் சந்தேகம் படுவாங்க. இந்த ஆவடியிலே இத்தனை பேக்டரி எல்லாம் வருமா; இத்தனை வீடுகள் எல்லாம் வருமா; பாடசாலை வருமா; என்று யாரேனும் கண்டார்களா? ஆகவே நான் சொல்லுவதிலே கொஞ்சம் நம்பிக்கை வைக்கவேண்டும். "நம்பினோர் கெடுவதில்லை" நான்மறை வாக்கு. பெரியோர் சொல்லியிருக்கின்றனர். நம்பிக்கை வைத்து நீங்கள் எல்லோரும் ஒத்துழைத்தீர்களேயானால் நிச்சயமாக சிறந்த நன்மையை அடைவோம் என்று உங்கள் மத்தியிலே நான் தெரிவித்து கொள்கின்றேன். எல்லாவிதமான தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த தொழிற்சாலைகளையெல்லாம் பார்க்கும்போது ஆவடிக்கு முன்பு வந்தவர்கள் பார்த்தார்களேயானால் இது எந்த ஊர்; இவ்வளவு தொழிற்சாலைகள், கட்டிடங்கள் ஏற்பட்டிருக்கின்றனவே என்று நினைப்பார்கள். எத்தனையோ தொழிலாளி மக்கள், பாட்டாளி மக்கள் வேலை செய்கிறார்கள் இங்கே. ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் பல கிராமங்களிலிருந்தும், ஆவடியில் இருந்தும் சரி, அல்லது திருமுல்லைவாயில் கிராமங்களிலிருந்தும் எல்லாம் இங்கு வந்து வேலை செய்கிறார்கள். இந்த வாய்ப்புக்கள் எல்லாம் தொழில் துறையில் நாடு

முன்னேற்றம் அடைந்து இராவிட்டால் அவர்களுக்கு கிடைத்திருக்காது.

தொழிலாளர் சமூகத்திற்கு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகின்றேன். உங்க குழந்தைகள் நன்ருக படிக்க வைப்பதற்கும் அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. அது எங்கள் கடமை. நாங்கள் செய்கின்ருேம். ஆனுல் உங்கள் கடமை நல்ல முறையிலே தொழில் வளர தொழிற்சாலையில் நீங்கள் உங்கள் கடமையை சரிவர செய்து நாட்டினிலே நல்ல முன்னேற்றம் ஏற்பட நாம் எல்லாம் நம் பணியை செய்வோம் என்ற நோக்கத்தோடு தொழிலாளர் சகோதரரும் தொழிலாளர் தோழர்களும் வேலை செய்ய வேண்டுமென்று இந்த சமயத்திலே நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஆனுல் சில சமயத்தில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி பல கோடி ரூபாய் செலவு செய்து கடைசியிலே ஒரு நாளுக்கு மறியல் என்று வந்துவிடும். தொழிற்சாலைகள் ஏற்படுத்தியிராவிட்டால் இத்தனை பேருக்கு வேலை கிடைத்திராது. ஆனுல் நியாயமான கோரிக்கை என்ருல் கோரிக்கைகளை கவனிப்பதற்கு அரசாங்கம் இருக்கின்றது. அதை கேட்டு அதன்படி நடக்க வேண்டும். இப்படித்தான் இதர நாடுகளிலெல்லாம் பார்க்கின்ருேம். தொழிலாளிகள், அதிகாரிகள், அரசாங்கத்திலே ஒரு முடிவு செய்து விட்டால் அதை ஏற்று நடக்கின்ருர்கள். இங்கே எது யார் சொன்னுலும் கேட்பதில்லை என்ற மனப்பான்மை இருக்கிறது. அது நல்லது இல்லை. இதை நல்ல முறையிலே உங்களுக்கு நான் மிக பணிவோடு தெரிவிததுக் கொள்ளுகின்றேன். உங்களுடைய குழந்தைகள் நன்ருக படிப்பதற்காக இங்கே போலீஸ் இலாகாவிலே பணி செய்கின்ற அன்பர்களுக்கு மட்டுமில்லை அதில் இதர கிராம குழந்தைகள் படிப்பதற்காகவும் ஏற்பாடுகள் செய்திருக்கின்ருர்கள். ரூ. 77,000 செலவு செய்து கட்டியிருக்கின்ருேம். பல குழந்தைகள் இங்கே மதிய சாப்பாடு சாப்பிடுவதற்காக ஏற்பாடு செய்திருக்கின்ருர்கள். மதிப்பிற்குரிய ஷெட்டி அவர்களுடைய தரும பத்தினியார் இந்த பொறுப்பினை போலீஸ் இலாகாவிலே பணி செய்கின்ற அன்பர்களுடைய குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக இந்த பணியை செய்வதோடு உதவி செய்ய முன் வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. நம்முடைய மாநிலத்தில் மாதர் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருகின்ற ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் இந்த குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தை இன்றைய தினம் ஆரம்பித்து வைக்கப் போவது மிகவும் பொருத்தமானது. அதை நல்ல முறையிலே இங்கு இருக்கின்ற பெரியோர்கள், தாய்மார்கள், எல்லாம் உபயோகித்து குழந்தைகளை பாடசாலைக்கு தவருது அனுப்பவேண்டும். படித்தால்தான் முன்னேற்றம். படிப்பதற்கு வசதி செய்திருக்கின்றது. இந்த வாய்ப்பை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இது ஆரம்ப பாடசாலையாகஇருக்கிறது. பிற்பாடு உயர்தர பாடசாலையாக வரும். இப்படி வருங்காலத்திலே குழந்தைகள் எல்லாம் நன்ருக படித்து உயர்ந்த நிலைக்கு போவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று இந்த சமயத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

இந்த வாய்ப்பினை கொடுத்ததற்காக இந்த பாடசாலையை திறந்து வைப்பதற்கும் குறிப்பாக லைப்ரெரியை திறந்து வைப்பதற்கும் சந்தர்ப்பத்தை கொடுத்ததற்காக ஐ. ஜி., ஷெட்டி அவர்களுக்கும், டி. ஐ. ஜி., ஹோம்ஸ் அவர்களுக்கும், மதிப்புக்குரிய புருஷோத்தம முதலியார் அவர்களுக்கும், விசேஷமாக இங்கு வந்துள்ள பஞ்சாயத்து யூனியன் சேர்மன் அவர்களுக்கும், பஞ்சாயத்து பிரெசிடெண்ட் அவர்களுக்கும், என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டு வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. டி. புருஷோத்தம முதலியார் அவர்கள் ஆற்றிய உரை

(ஜில்லா நூலகக்குழுத் தலைவர்)

முதலமைச்சர் அவர்களுக்கும், நமது உள் துறை அமைச்சர், ஸ்ரீ கக்கன் அவர்களுக்கும், இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களுக்கும், ஏனைய பெரியோர்களுக்கும், தாய்மார் அவர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் வணக்கம்.

சென்னை மாவட்ட நூலகக் குழுவின் சார்பில் நமது முதலமைச்சர் அவர்களையும், உள்துறை அமைச்சர், ஸ்ரீ கக்கன், அவர்களையும், நான் இந்த விழாவிற்கு வருக, வருக என்று வரவேற்கிறேன். இந்த புனிதமான இடத்தில் இங்கே ஏற்படுத்தியிருக்கும் பள்ளிக்கு ஒரு புது கட்டிடம் திறக்கும்போது இங்கே ஒரு நூலகமும் ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கின்றோம். நமது காங்கிரஸ் மகாநாடு நடந்த இந்த புனித இடமான, தலைவர் சத்தியமூர்த்தி பெயரால் உள்ள நகரில், ஒரு புதுபள்ளிக்கட்டிடமும், நூலகமும் ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கின்றது என்று நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள்.

சத்தியமூர்த்தி நகரில் ஏற்படுத்தி இருக்கின்ற இந்த நூலகத்திற்கு "சத்தியமூர்த்தி" நூலகம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கின்றோம். இந்த நூலகத்தை நமது உள்துறை அமைச்சர் அவர்களை திறந்து வைக்கும்படி லோகல் லைப்ரெரி அதாரட்டி சார்பில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இப்பொழுது 65 லைப்ரெரிகள் இருக்கின்றன. இது 66வது லைப்ரெரியாக இன்று காலை திறப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். நூலகங்கள் எல்லாம் கிராமங்களிலேயே ஏற்பாடு செய்திருக்கின்றோம். ஆவடியில் ஒரு நூலகம் இருக்கின்றது. ஆனால் சத்தியமூர்த்தி நகருக்கும் (எஸ். ஏ. பி. கேம்ப்) தனியாக ஒரு லைப்ரெரி ஏற்படுத்தவேண்டுமென்று இங்கே இருக்கும் உதவி தளவாய், உயர்திரு. வி. ஜி. மனோஹரன் எங்களை கேட்டபோது இது போலீஸ் துறை அதிகாரத்தில் இருப்பதனால் இங்கே போலீஸ் டிபார்ட்மெண்டுதான் நூலகம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு பிரச்னை ஏற்பட்டது. ஆனாலும் நூலகங்களெல்லாம் ஒரு இலாகாவில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தைக்கொண்டு இங்கே நூலகம் ஏற்படுத்த ஒப்புக்கொண்டார்கள். பிறகு கூட இதை ஒரு டெலிவரி ஸ்டேஷன் ஆக நடத்தினால் போதுமென்று ஒரு உத்தேசம் இருந்தது—ஆவடியிலிருந்து இங்கு புத்தகங்கள் அனுப்புவது என்று. ஆனால் இங்கே ஜனத்தொகை ஐயாயிரம் இருப்பதனால் இந்த இடத்தில் தனியாக லைப்ரெரி ஏற்படுத்த வேண்டும் என்று சாங்ஷன் செய்து இந்த லைப்ரெரியை இங்கே ஏற்படுத்தி இருக்கின்றது. தனியாக இதற்கு ஒரு லைப்ரேரியன் ஸ்டாப் இருப்பார்கள். புத்தகங்கள், பத்திரிகைகள், எல்லாம் வரும். இவைகளையெல்லாம் இலவசமாக எல்லோரும் வந்து படிக்கலாம். புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துக் கொண்டுபோய் வாசிப்பதற்கு இங்கே ஏற்பாடு செய்து தரப்படும். அந்த வசதிகளை எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றம் அடைய வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொள்ளுகின்றேன். இந்த நூலகமானது இன்று இங்கே திறக்கப்பட்டு, அருகாமையிலிருக்கும் எஸ்.ஏ.பி. கேம்ப் இன்பர்மேஷன் செண்டரில் இதை தற்காலிகமாக நடத்துவதாக உத்தேசித்து இருக்கின்றோம். பிறகு இங்கே கட்டிடங்களெல்லாம் கட்டி முடிந்தவுடனே பள்ளிகூடத்திற்கு பக்கத்தி லிருக்கும நிலத்தில் ஒரு லைப்ரெரி கட்டிடம் தனியாக

கட்டிக் கொடுப்பதாகவும் தெரிவித்து இருக்கின்றார்கள். அந்த கட்டிடம் கட்டி முடிந்தவுடனே அந்த கட்டிடத்தில் லைப்ரெரி நடத்துவதற்கு கட்டிடம் வசதியாகவும் இலவசமாகவும் அதற்கு வேண்டிய உதவிகளெல்லாம் தந்த நமது ஐ. ஜி. ஆப் போலீஸ் திரு. ஷெட்டி அவர்களுக்கும், டி.ஐ.ஜி. ஆப் போலிஸ், திரு. எம். ஜே. ஹோம்ஸ் அவர்களுக்கும், இங்கே உதவி தளவாய் ஆக இருக்கும் திரு. வி. ஜி. மனோஹரன் அவர்களுக்கும். எமது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த காலனியில் மக்களுக்கு ஷேமநல அபிவிருத்தியில் வேண்டிய வசதிகள் எல்லாம் செய்துக்கொண்டு வருவதைக் கண்டு நானும் மகிழ்ச்சி அடைகின்றேன். அந்த திட்டத்தில் இங்கே லைப்ரெரியும் ஏற்படுத்தினது பொறுத்தமானது என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். லைப்ரெரிகள் எவ்வளவு அவசியம் என்பதை நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை. மிஸ்டர் சாக்ளா என்ற புது கவர்ன்மென்ட் ஆப் இந்தியா கல்வி அமைச்சர் அவர்களும் லைப்ரெரிகள் எங்கும் ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்து இருக்கின்றார்கள். நமது மாவட்டத்தில் நூல்நிலைய இயக்கம் நன்றாக நடந்து வருகின்றது. பெண்களுக்கு விமன் லைப்ரெரி சர்வீஸ் ஏற்படுத்தியிருக்கின்றோம். ஆஸ்பத்திரிகளிலெல்லாம் லைப்ரெரிகள் ஏற்படுத்தி ஆஸ்பிடல் லைப்ரெரி சர்வீஸ் என்று வைத்து இருக்கின்றோம். மேலும் ஸ்டூடண்ட் லைப்ரெரி சர்வீஸ் என்று ஆங்காங்கே மாணவர்கள் புத்தகங்களை எடுத்துக்கொண்டு நூல் நிலைய இயக்கத்திற்கு உதவி புரிந்து வருகின்றார்கள். சில இடங்களில் ஸ்டூடண்ட் ஸ்டடி சர்க்கிள் என்று லைப்ரெரிக்கு சேர்த்து வைத்திருக்கின்றோம். லைப்ரெரி என்றால் ஏதோ புத்தகம் படிப்பதற்கு மட்டுமில்லாமல் கல்சரல் ஆக்டிவிடிஸ் நடத்த வேண்டுமென்று சில இடங்களில் உபன்நியாசங்கள், லெக்சர்கள், இவைகளையெல்லாம் ஏற்பாடு செய்கின்றார்கள். திரு நகர் என்ற இடத்தில், காஞ்சிபுரத்திலிருந்து வந்து இருக்குறள் கிளாஸ் நடத்துகின்றார்கள் அங்கேஒருவர் திருவள்ளுவர் படம்கூட எங்கள் லைப்ரெரிக்கு கொடுத்திருக்கின்றார். இவ்விதமாக லைப்ரெரி இயக்கம் நன்றாக நடப்பதற்கு நமது மாவட்டத்தில் நமது முதலமைச்சர் திரு எம். பக்தவச்சலம் அவர்கள் எங்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் கொடுப்பதினால்தான் இவ்வளவு அழகாக நடந்து வருகின்றது என்று சொல்வதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் பண வருவாய் பார்க்கப் போனால் செங்கற்பட்டு மாவட்ட நூலகத்திற்குதான் நிதி ரொம்பவும் குறைவாக இருக்கின்றது. எல்லா மாவட்டங்களைவிட இங்கே குறைவாக இருக்கின்றது. இருந்தபோதிலும் அரசாங்கத்தாருடைய உதவியினாலும் பொது மக்களுடைய ஆதரவாலும் நூலகங்கள் நன்றாக நடந்து வருவதை சந்தோஷமாக தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த எஸ்.ஏ. பி. காலனியில் ஷேமநல திட்டத்திற்கு ஷேமநல நிதியிலிருந்து டிஸ்டிரிக்ட் வெல்பேர் நிதி என்று வைத்திருக்கின்றோம். அதிலிருந்து உதவி வேண்டுமென்று திரு. வி. ஜி. மனோஹரன் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். அதற்கு கலெக்டர் அவர்கள் சேர்மென் ஆக இருக்கின்றார்கள். அடுத்த கூட்டத்தில் அதையும் வைத்து எங்களால் ஷேம நல அபிவிருத்திக்காக இங்கே ஏதாகிலும நல்ல காரியம் நடத்துவதற்கு அந்த நிதியிலிருந்து ஏதாகிலும் உதவிவேண்டுமானாலும் கொடுக்க தயாராக இருக்கின்றோம் என்பதையும் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த காலனியில் எல்லோரும் கவர்ண்மென்ட் உத்தியோகஸ்தர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் ஊக்கமாகவும் நல்ல இடத்திலும் அவர்கள் அலுவல்களை நடத்தி இருக்கின்றார்கள். அவர்களுக்கு அரசாங்கம் வேண்டிய உதவிகளையும் வேண்டிய நன்மைகளையும் செய்து கொண்டு வருகின்றனர். இப்பொழுது ஏற்படுத்தியிருக்கும் இந்த பள்ளிக் கூட வசதியினாலும் நூலக வசதியினாலும்

மேலும் மேலும் அதிகமாக ஊக்கமாக அவர்களுடைய கடமையை செலுத்துவது நாட்டிற்கும் மக்களுக்கும் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு மறுபடியும் இறைவன் அருளாலும் நமது முதலமைச்சர், உள் துறை அமைச்சர், அவர்களுடைய ஆசிர்வாதத்தாலும் இந்த நிலையங்கள் நன்ருக இயங்க இறைவன் அருள் புரிய வேண்டுமென்று வேண்டிக் கொண்டு நான் திரு. கக்கன் அவர்களை இந்த புதுப் பள்ளிக் கட்டிடத்தையும் நூலகத்தையும் திறந்து வைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வணக்கம்.

கல்வி

"கண்ணுடையவர் என்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

—குறள்.



Srimathi SAROJINI VARADHAPPAN,
Lighting **Kuthuvilakku** *in the school building.*



Srimathi SAROJINI VARADHAPPAN,

Inaugurating the midday meals scheme, of the girls section.



Hon'ble Sri M. BHAKTHAVATSALAM,
Chief Minister of Madras, going round the library.



Srimathi SAROJINI VARADHAPPAN,

Inaugurating the midday meals scheme of the girls section.

திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் ஆற்றிய உரை

(மாநில க்ஷேமநல ஸ்தாபன தலைவி)

மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்களே, உள்துறை அமைச்சர் அவர்களே, இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களே, கலெக்டர் அவர்களே, மற்றும் கூடியிருக்கும் பெரியோர்களே, தாய்மார்களே, குழந்தைகளே, வணக்கம்.

இன்று விசேஷ ஆயுத போலீஸ் படையினருடைய இந்த சிறப்பான விழாவில் கலந்து கொள்ளும் ஒரு வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு முதலில் நான் என்னுடைய மனமுவந்த நன்றியை விசேஷ ஆயுத போலீஸ் படையினருக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அவர்களுடைய பல நல்ல வேலைகள் முக்கியமாக க்ஷேமநல வேலைகளில் அவர்கள் ஈடுபட்டு பல அரிய திட்டங்களை எல்லாம் நடத்திக்கொண்டு வருவது நமக்கு எல்லோருக்கும் தெரியும். அதிலும் விசேஷமாக நம்முடைய போலீஸ் இலாகாவினர் நம்முடைய ராஜ்ஜியத்தில் இம்மாதிரியான க்ஷேமநல வேலைகளில் மிக அக்கறைகொண்டு சிறப்பாக செய்து வருவதைப் பார்த்து மற்ற ராஜ்ஜியங்களில் இருப்பவர்கள் அதிசயிக்கும் அளவிற்கு நாம் செய்து வந்திருக்கும் சேவைக்கு காரணம் இந்த அதிகாரிகள் எடுத்துக் கொள்ளும் ஒரு அக்கறையும் ஆர்வமும் என்று சொன்னால் மிகையாகாது என்று நினைக்கிறேன். அரசாங்கம் எவ்வளவுதான் உதவி கொடுத்த போதிலும் அதிகாரிகளும் பொது மக்களும் இம்மாதிரியான காரியங்களில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ளவில்லையென்றால் இது இத்தனை சிறப்பை அடைந்திருக்க முடியாது. எனவே அவர்களுக்கு நம்முடைய பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம்.

இம்மாதிரி பல துறைகளில் நீங்கள் செய்து வந்திருக்கும் சேவைகளில் இன்று முக்கியமாக இந்த சரித்திர பிரசித்தமான சத்தியமூர்த்தி நகரில் இந்த குழந்தைகளுக்காக ஒரு பள்ளியை அமைத்திருப்பது நீங்கள் செய்து வரும் பல சேவைகளில் மிகவும் சிறப்பானதொரு சேவை என்று சொல்லலாம். மிகவும் அழகான ஒரு பாடசாலைக் கட்டிடம் அமைத்திருக்கின்றார்கள். அதைப் பார்ப்பவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. சென்னையில்கூட பல குழந்தைகளுக்கு பல ஆண்டுகளாக நடத்தி வரும் பள்ளிக்கு கூட இத்தகைய அழகானகட்டிடம் அமையவில்லை. ஆகவே உள்துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் கொஞ்ச காலத்திற்கு முன்பாக இந்த பிரதேசத்திற்கு வந்திருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு ஐந்து ஆறு ஆண்டுகளுக்குள்ளாக எவ்வளவு அழகாக கட்டிடங்களை அமைத்து இங்கு இம்மாதிரி ஒரு ஆரம்ப பள்ளி பாடசாலை வரும் என்று யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் நம்முடைய பல ஐந்தாண்டு திட்டங்களுடைய ஒரு விளைவு இத்தகைய நல்ல பல நன்மைகளை இங்குள்ள பொது மக்கள் அடைந்து வருவது எல்லோரும் வரவேற்கத்தக்க ஒரு விஷயமும் அது மட்டுமில்லாமல் சத்தியமூர்த்தி அவர்களுடைய பெயரை தாங்கியிருக்கும் இந்த இடத்தில் இங்கு முக்கியமாக அவர்கள் எல்லோரும் நன்றாக கல்வி அறிவு படைத்தவர்களாக இருக்க வேண்டுமென்று வேண்டினார்களோ, அந்த வகையில் நீங்கள் இங்கு ஆரம்ப பாடசாலையை ஆரம்பித்திருக்கின்றீர்களோ, அது சீக்கிரத்தில் இந்த சமுதாயம் எவ்வாறு வளர்த்துக் கொண்டு வருகின்றதோ, இந்த ஆவடி எவ்வாறு மிகவும் வேகமாக வளர்ந்துக்கொண்டு வருகின்றதோ, அந்த அளவிற்கு ஐ. ஜி.

அவர்கள் கூறினதுபோல் இது சீக்கிரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியாக அமையுமென்பதற்கு சந்தேகமே கிடையாது. பள்ளியில் கல்வியை கொடுத்தால் மட்டும் போதாது. நூல்நிலையம், அமைக்கவேண்டும். குழந்தைகளை அறிவில் சிறந்தவர்களாக ஆக்க வேண்டும் என்று நூல்நிலையத்தையும் இங்கு அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். இவைகளையெல்லாம் மிக முக்கியமாக குழந்தைகளுக்கு வயிறார உணவு கொடுத்தால் தான் கல்வி அறிவு அவர்கள் பெறுவதற்கு அது முதல் காரணமாக இருக்குமென்று நன்றாக உணர்ந்து இன்று மதிய உணவும் ஆரம்பிப்பதற்காக நீங்கள் ஏற்பாடு செய்திருப்பதை நான் பெரிதும் பாராட்டுகின்றேன், வரவேற்கின்றேன். ஆகவே குழந்தைகளுக்கு வயிறார அன்னம் படைத்து அவர்களுக்கு கல்வியும் கொடுத்து அவர்களுடைய அறிவை நன்றாக விருத்தி செய்வதற்காக பல துறைகளில் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டு இம்மாதிரி திட்டங்களை யெல்லாம் அமைத்துக் கொடுத்த எல்லோருக்கும் நான் இந்த நல்ல நாளில் முக்கியமாக தாய்மார்கள் அவர்களுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டு இருக்கின்றேன். இத்தகைய நல்ல வேலைகளில் அமைச்சர்கள் அவர்கள் கூறினது போல் தாய்மார்கள் பெருவாரியாக தங்களுடைய குழந்தைகளை இத்தகைய நல்ல ஒரு பள்ளிக்கு அனுப்பி அந்த குழந்தைகளுக்கு இந்த பள்ளியில் இடம் இல்லை என்றும் கூறும் அளவிற்கு நீங்கள் உங்களுடைய குழந்தைகள் எல்லோரையும், இங்கு அனுப்பி இதில் கிடைக்கும் பல நன்மைகளை நீங்கள் பெற வேண்டுமென்று உங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டு, இந்த நல்ல விழாவில் மதிய உணவை ஆரம்பித்து வைக்கும் ஒரு அருமையான வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு மற்றும் ஒரு முறை விசேஷ ஆயுத போலீஸ் படையினருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு இதில் கலந்துக்கொண்டு அக்கறைக் காட்டிய அவ்வளவு பேருக்கும் மற்றுமொரு முறை நான் என்னுடைய பாராட்டுதல்களையும் நன்றியும் தெரிவித்துக் கொண்டு இந்த மதிய உணவை பெரிதும் மகிழ்ச்சியுடன் ஆரம்பித்து வைக்கிறேன்.

வணக்கம்.

ஸ்ரீமதி வரதப்பன் அறிவிப்பு.

ஒரு சிறு அறிவுப்பு. சென்ற முறை இந்த விசேஷ ஆயுத போலீஸார் விழாவிற்கு வந்திருந்த போது இங்கிருக்கும் குடும்பத்தினருடைய குழந்தைகளுக்கு அதாவது 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பால்வாடி வகுப்பு ஆரம்பிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதை நம்முடைய அரசாங்கத்தின் உதவியும் மத்திய சமூக நல போர்டினுடைய உதவியும் பெற்று அந்த பால்வாடி வகுப்பு ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் கொடுத்திருக்கின்றார்கள், என்பதை நான் மகிழ்ச்சியுடன் இந்த விழாவில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.



S. A. P. Officers who organised the function.

Vote of thanks
by
Sri M. J. HOLMES,
Deputy Inspector-General of Police, Railways & Armed Police, Madras.

Hon'ble Chief Minister, Hon'ble Home Minister, Mrs. Varadhappan, Ladies and Gentlemen,

